# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 260/2015 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | ராம்குமார் | நாள் | 04.03.2024 |
| தகப்பனார் பெயர் | சுதர்சனம் | | |

**2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

6) இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி கமலா என் தாயார் என்றால், சரிதான். 2ம் பிரதிவாதி பரஞ்ஜோதி என் சின்னம்மா என்றால், சரிதான். வாதி கலா என் தாய்மாமன் மகள் என்றால், சரிதான். இவ்வழக்கை யார் எதிர்வாதம் செய்து, நடத்திவருகிறார்கள் என எனக்கு தெரியுமா என்றால், 2ம் பிரதிவாதி மட்டும்தான் எதிர்வாதம் செய்கிறார். இவ்வழக்கில் வாதியின் வழக்குரை சங்கதிகள் மற்றும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரை சங்கதிகளை நான் தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. நான் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரிதான்.

7) சர்வே எண்.193/1ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 3.10 ஏக்கர் ஆகும். மேற்படி நிலத்தின் செக்குபந்தி விவரங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. ஆண்டிமுத்துக்கவுண்டர் எப்போது இறந்தார் என்றால், தேதி எனக்கு சரியாக தெரியாது. நான் சிறுவனாக இருக்கும்பொழுது இறந்துவிட்டார். வயது எனக்கு குறிப்பாக நினைவில்லை.

8) சர்வே எண்.193/1ல் உள்ள சொத்திற்கு ஆதியில் யார் பெயரில் பட்டா இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், என் தாய்வழி பாட்டி சின்னம்மாள் பெயரில் இருந்ததாக கேள்விப்பட்டுள்ளேன். ஆனால், நான் பார்த்ததில்லை. எப்போது சின்னம்மாள் பெயருக்கு மாறியது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. சர்வே எண்.193/1ற்குரிய என் பாட்டன் ஆண்டிமுத்துக் கவுண்டர் பெயரிலோ, என் பாட்டி சின்னம்மாள் பெயரிலோ ஏதேனும் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால், இல்லை.

9) வாதியின் தந்தை மல்லையன் எப்போது இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தேதி, மாதம், வருடம் எனக்கு தெரியாது. என் பாட்டி சின்னம்மாள் எப்போது இறந்தார் என்றால், மேற்படி தேதியும் எனக்கு தெரியாது. சர்வே எண்.193/1ல் உள்ள நிலம் குறித்து 2ம் பிரதிவாதி பரஞ்ஜோதி பெயருக்கு என் பாட்டி சின்னம்மாள் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததாக என் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால், இல்லை. ஆனால், 3 நபர்களுக்கும் தலா 1 ஏக்கர் என சொல்லியுள்ளேன்.

10) மேற்படி 3 நபர்களுக்கும் தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஒரே ஆவணத்தில் எழுதப்பட்டதா என்றால், இல்லை. அவை தனித்தனியாக எழுதப்பட்டது. மேற்படி 3 பத்திரங்களையும் நான் பார்த்துள்ளேனா என்றால், 2ம் பிரதிவாதி பரஞ்ஜோதி பத்திரத்தை தவிர, என் தாயார் பெயரில் உள்ள பத்திரத்தையும், வாதி பெயரிலுள்ள பத்திரத்தையும் பார்த்துள்ளேன். என் தாயார் பெயருக்கு எந்த தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால், தேதி, மாதம் சரியாக நினைவில்லை, ஆனால் 1990ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதேபோல் 2ம் பிரதிவாதி பரஞ்ஜோதி பெயருக்கு எந்த தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால், தேதி, மாதம் சரியாக நினைவில்லை, ஆனால் 1983ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்டது. வாதி கலா பெயருக்கு எந்த தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால், தேதி, மாதம் சரியாக நினைவில்லை, ஆனால் 1994ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்டது.

11) மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்களில் யார் யார் சாட்சி கையெழுத்திட்டுள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. ஒவ்வொரு பத்திரங்களிலும் அதில் கண்டுள்ள சொத்துகளுக்கு என்ன செக்குபந்தி விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்படி பத்திரங்கள் ஒவ்வொன்றிலும் என்ன முத்திரை தாள் செலுத்தப்பட்டுள்ளது என்ற விவரமும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்கு என்ன மதிப்பு கண்டெழுதப்பட்டுள்ளது என்ற விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால், அது

குறித்து எனக்கு தெரியாது.

12) என் பிரமான பத்திரிக்கையில் தாவா சொத்திற்கு என்ன பட்டா எண் குறிப்பிட்டுள்ளேன் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கை என் தாயாரும், வாதியும் ஒன்றாக நடத்துகின்றனரா என்றால், ஆமாம். அதனால் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். என் பாட்டி சின்னம்மாள் இறக்கும் வரை 2ம் பிரதிவாதியின் பராமரிப்பில்தான் இருந்தார் என்றால், 3 பெண் மக்களும் பார்த்துக்கொண்டனர்.(சாட்சி தற்போது பாட்டி தனியாக இருந்ததாகவும், அவ்வப்போது 3 பெண் மக்களும் தேவையானதை செய்து, பராமரித்ததாகவும், தனிப்பட்ட முறையில் அவரை யாரும் பராமரிக்கவில்லை எனவும் சாட்சியம் அளிக்கிறார்).

13) மேற்படி சின்னம்மாளையும், தாவா சொத்தையும் சின்னம்மாளின் இறுதி காலம் வரை 2ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்றால், சரியல்ல. வாதி பெயருக்கு கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வராததால், அதை சின்னம்மாள் ரத்து செய்துவிட்டு, மேற்படி சொத்தை சின்னம்மாள் 2ம் பிரதிவாதியிடம் அளித்து, அதை 2ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்றால், சரியல்ல.

14) வாதி தன் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் கொடுக்கப்பட்ட சமயத்தில் யாருடன் வசித்து வந்தார் என்றால், அவரது கணவர் வீட்டில் பொட்டிகட்டியூரில் வசித்து வந்தார். தற்போது வரை வாதி கலா அங்கு தான் வசித்து வருகிறார். நான் சொல்வது தவறானது என்றாலும், வாதி பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட்டவுடன் மேற்படி சொத்தை 2ம் பிரதிவாதிதான் பராமரித்து வந்தார் என்றாலும், என் பாட்டி சின்னம்மாள் இறந்ததற்கு பின்னிட்டு என் தாயாரும், வாதியும் சேர்ந்து 2ம் பிரதிவாதியின் பராமரிப்பிலுள்ள தாவா சொத்தை விற்கவேண்டும் என 2ம் பிரதிவாதியிடம் கேட்டனர் என்றாலும், அதற்கு 2ம் பிரதிவாதி மறுப்பு தெரிவித்ததால்தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், சரியல்ல.

15) மேற்படி சின்னம்மாள் எவ்வளவு நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால், சுமார் 2 மாதங்கள் இருந்திருப்பார். நான் சொல்வது தவறானது என்றாலும்,

என் பாட்டி சின்னம்மாள் ஆண்டு கணக்கில் படுத்த படுக்கையாக இருந்தார் என்றாலும், அவரை பராமரித்து மருத்துவ உதவி செய்தது அனைத்தும் 2ம் பிரதிவாதிதான் என்றாலும், மேற்படி நிலத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தை வைத்தும், தன் சொந்த செலவிலும், சின்னம்மாளை பராமரித்து வந்தார் என்றாலும், சரியல்ல.

16) என் தாயாருக்கும், 2ம் பிரதிவாதி பரஞ்ஜோதிக்கும் எப்போதிலிருந்து பேச்சுவார்தை இல்லை என்றால், தற்போது வரை அவர்கள் சுமூகமாகதான் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறானது என்றாலும், இவ்வழக்கை வாதி தாக்கல் செய்வதற்கு நானும், என் தாயாரும் தான் காரணம் என்றால், சரியல்ல. என் தாயார் தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால், என் தாயாருக்கு மனநலம் பாதிக்கப்பட்டு, சுமார் 10 ஆண்டு காலமாக என் பராமரிப்பில் தான் இருந்துவருகிறார். என் தாயாருக்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை தற்போதுதான் நீதிமன்றத்தில் எங்கள் தரப்பில் நாங்கள் சொல்கிறோம் என்றால், சரிதான். யாரும் கேட்காததால் சொல்லவில்லை. மேற்படி என் தாயாருக்கு மனநலம் சரியில்லை என்ற சங்கதி வாதிக்கு தெரியும் என்றால், எல்லோருக்கும் தெரியும்.

17) என் தாயார் கமலாவிற்கு செட்டில்மெண்ட் அளிக்கப்பட்ட சொத்தை எந்த ஆண்டு விற்பனை செய்தார் என்றால், செட்டில்மெண்ட் ஆவணம் அளிக்கப்பட்ட உடனேயே விற்றுவிட்டார். எங்கள் குடும்பத்திற்கும், 2ம் பிரதிவாதி குடும்பத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. தற்போது தான் என் தாயாருக்கு மனநலம் சரியில்லை என்ற சங்கதியை நீதிமன்றத்தில் நாங்கள் தெரிவிக்கிறோம் என்றால், சரிதான். வாதிக்கு அனுசரணையாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.